பெ.செ.எண்: 062                                                                                    நாள்: 06.08.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 6.8.2015

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம் மற்றும் கிராமம், புதுப்பாளையத்தில் அமைந்துள்ள டாஸ்மாக் கடையில் விற்பனையாளராகப் பணிபுரிந்து வந்த ஆத்தூர் வட்டம், நாவலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. துக்கப்பிள்ளை என்பவரின் மகன் செல்வம் அவர்கள் 4.8.2015 அன்று இரவு பணியை முடித்து விட்டு, கடையை உட்புறமாக மூடிக்கொண்டு விற்பனையான தொகையை கணக்கிட்டுக் கொண்டிருந்த போது, சில விஷமிகள் டாஸ்மாக் கடை ஷட்டர்களின் இடைவெளியில் பெட்ரோல் ஊற்றி, தீ வைத்ததில் ஏற்பட்ட புகையினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த டாஸ்மாக் விற்பனையாளர் திரு செல்வம் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு செல்வம் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஏழு லட்சம் ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

மறைந்த திரு செல்வம் அவர்களின் குடும்பத்திற்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திலிருந்து குடும்ப நல நிதி, தொழிலாளர் வைப்புத்தொகையுடன் இணைந்த காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் பணப்பயன்கள் மற்றும் சட்ட ரீதியான இதர பணப்பலன்களையும் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், அன்னாரது குடும்பத்தின் ஏழ்மை சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அவரது மனைவிக்கு சத்துணவு மையத்தில் பணி வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தக் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9